Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் : 02 ஏப்ரல் (06 - 04 - 1991) சனிக்கிழமை ஓசை: 47

## நிறுத்தல் அளவைகளுக்கு உடன் முத்திரையிடவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து வியாபாரிகளும் தமது தராசு, படிகளுக்கு முத்திரை குத்தும் வேலைகளை உடனடியாக மேற்கொள்ளும்படி செயலக நிறுவை, அளவைப் பிரிவினர் அறிவித்துள்ளனர். இதற்கான அறிவித்தல் முன்னரே விடுக்கப்பட்டபோதிலும் சில வியாபாரிகள் இதுவரை முத்திரை குத்தாமல் இருப்ப (6 ஆம் பக்கம் பார்க்க)

## திபனுக்கு மக்கள் அஞ்சலி

(செ. த. மை)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் 4-4-91 அன்று இடம்பெற்ற நேரடியுத்தத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கை சு. பிரபணியம் சுகந்தகுமார் (திபன்) அவர்களின் புகழுடம்பு இன்று 6 ஆம் திகதி வட்டுக்கோட்டை இராத்தலடிச் சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. பிற்பகல் இவரின் புகழுடம்பு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## ஐந்து தமிழர் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் ஊர்காவல்படையினரால் ஐந்து தமிழ்ப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள அலிக்கம்பை என்ற இடத்திற்கு விறகு எடுக்கச்சென்ற ஐந்து தமிழ்ப் பொதுமக்களை மறித்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் சுட்டுக்கொன்றுள்ளனர்.

## ஆதரவாளர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவர் புளொட் குழுவினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் நடைபெற்ற இச் சம்பவத்தில் நாவற்குடாவைச் சேர்ந்த புலிகள் ஆதரவாளரான பாலசுந்தரம் ரவீந்திரன் (வயது 31) என்பவரே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

## மோசடிக்காரர் புலிகளின் விசாரணையில்

(செ. த. மை.)

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி பலரிடம் போலி ஆவணங்களைக் காட்டி பண மோசடிசெய்த ஒருவர் விடுதலைப்புலிகளால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி விமான மோதலில் 7 பேர் பலி

(பிலடெல்பியா)

ஹெலிகொப்டர் ஒன்றும், தனியார் விமானம் ஒன்றும் நடுவானில் மோதிக்கொண்டன. இச்சம்பவத்தில் செனட்டர் ஜோன் கெயிஸ் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் பிலடெல்பியாவில் நேற்று மதியபோசன நேரத்தின்போது பாடசாலை ஒன்றுக்கு மேலே நடுவானில் இவ் விபத்து இடம்பெற்றது. இரண்டு பாடசாலை மாணவர் இருவரும், ஹெலிகொப்டரில் பயணம் செய்த இருவரும் மற்றும் விமானத்தில் பயணம் செய்த மூவரும் உயிரிழந்தனர்.

# பல மோதல் சம்பவங்களில் 14 இராணுவத்தினர் நேற்றுப்பலி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற பல மோதல் சம்பவங்களில் பதினான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதல் சம்பவங்கள் பெரும்பாலும் வட பாகத்திலேயே இடம்பெற்றதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது. பிரதானமோதல் காரைநகர் கடற்படை முகாமை அண்டியும், வவுனியா, மன்னார் காட்டுப் பகுதியிலும் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வவுனியா இராணுவத்திற்கு பலத்த சேதம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டது. புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; நேற்றுமுன்தினம் வவுனியா மாவட்டத்தில் உள்ள குடுவெந்தபுலவு, பனையூர் ஆகிய இரு இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நானாட்டான் பகுதியில் புலிகள்-இராணுவம்மோதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர் உதவியுடன் முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது நேற்று முன்தினம் காலைபத்து மணியளவில் நறுவிலிக்குளம், அச்சங்குளம் ஆகிய இடங்களில் நின்ற சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று குண்டுவீச்சு விமானங்கள் ஒரு ஹெலிகொப்டர் உதவியுடன் முன்னேற முயன்ற போது இரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் இருந்து காரைநகர்மீது ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படைத்தளத்தை அண்டிய பகுதிகள் மீது பலாலி இராணுவ முகாமில் இருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு பல தடவை நடாத்தப்பட்ட இத்தாக்குதல்களின் போது முகாமை அண்டியுள்ள சில வீடுகள் சேதமடைந்துள்ளன. அதேவேளை கடற்படை முகாமிலிருந்தும் இடையிடையே ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. சீப்பிளேன் ஒன்று வானில் பல முறை வட்டமிட்டு நோட்டமிட்டது. (ஈ)

## ஐந்து புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணியளவில் வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் 2 ஆவது லெப். இளங்கோ, இராமநாதபுரம் சகாதேவன், சம்பல்தீவு திருக்கோணமலை என்ற போராளி வீரமரணமடைந்துள்ளனர்.

இதேதினம் வவுனியா மாவட்டத்தில் குடுவந்தபலவு பனையூர் இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறி பம்மைமடுவுக்கு வந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விக்டர் (அ. சுந்தரலிங்கம், இறம்பைக்குளம், வவுனியா), பாலு (செ. சுந்தரலிங்கம், அண்டி வீதி சின்னக்குளம், வவு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எயிட்ஸிற்கு மருந்து

எயிட்ஸ் நோயைத் தடுப்பதற்கான மருந்தொன்றை கண்டு பிடித்திருப்பதாக பல்கேரிய விஞ்ஞானிகள் அறிவித்து உள்ளனர். டி. ஆர். என அழைக்கப்படும் இந்த ஊசி மருந்து மனித உடலில் செலுத்தப்படின் எயிட்ஸிருமிகள் பல்கிப்பெருகுவது தடுக்கப்படுகிறது.

## 8 இராணுவத்தின் சடலங்கள் செஞ்சிலுவை ஊடாக கடற்படையிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் கடந்த புதன் கிழமை கைப்பற்றப்பட்ட சிறிலங்கா ஆயுதப்படையைச் சேர்ந்த எட்டுப்பேரின் சடலங்கள் நேற்று சிறிலங்கா கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுக் காலை இந்தசடலங்கள் ஒப்படைப்பு இடம்பெற்றது. விடுதலைப்புலிகள் மக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எந்தப் பிரச்சினைக்கும் யுத்தத்தின் மூலம் தீர்வுகாண முடியாது - பிரேமதாசா

(கொழும்பு)

எந்த ஒரு பிரச்சினைக்கும் யுத்தத்தின்மூலம் தீர்வுகாண முடியாது என்றும், பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்றும் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

தற்போது வடக்குக் கிழக்கில் தொடரும் நெருக்கடிகளுக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்றும், பேச்சுவார்த்தைகள் மூலமே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவேங்கைஇளங்கோவிற்கு மக்கள் இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

காரைநகரில்கடந்தவியாழக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை இளங்கோவின்புகழுடல் நேற்று முன்தினம் தென்மராட்சிப் பகுதியில் கட்டுவில் சோமாஸ்கந்தா சனசமூக நிலையம், சாவகச்சேரி சந்தை மைதானம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியஇடங்களில் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கால் விடைத்தாள் அனுப்ப முடியாத நிலை

வவுனியாப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருப்பதாலும் விமானப்படையின் குண்டு வீச்சுக்கு கேரதீவு சங்குப்பிட்டிப் பாதை சேதமாக்கப்பட்டதனாலும் திட்டமிட்டபடி ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களைக் கொழும்பிற்கு அனுப்ப முடியாதிருப்பதாக யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பரீட்சை முடிந்து ஒருவாரமாகியும் விடைத்தாள்கள் அனுப்பத் தொடர்ந்தும் இடையூறுகள் ஏற்பட்டவண்ணமுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்குவரும் கப்பல்களில் முத்திரைஅனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி நோக்கிவரும் கப்பல்கள் அனைத்திலும் முத்திரைகள் அனுப்பிவைக்கப்பட வேண்டுமென கொழும்பு தபால் திணைக்களத்திடம் யாழ் மாவட்ட தபால் அதிபர்கள் வலியுறுத்தி உள்ளதாக பிரதம தபால் அதிபர் தெரிவித்தார்.

மேலும் வடபகுதியில் தற்போது தபாலகங்களில் முத்திரை இல்லாத நிலைகுறித்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.செயலகத்தில் இதுவே எனது கடைசிக் கூட்டம் அன்ரன் அல்பிரட்

(யாழ்ப்பாணம்)

"இன்றுநான் கலந்துகொள்ளும் கூட்டமே யாழ். செயலகத்தில் எனது இறுதியான கூட்டமாக இருக்கும்" என கண்கள் கலங்கிய நிலையில் நேற்று இடம்பெற்ற உணவு விநியோகம் பற்றிய கூட்டத்தில் யாழ். அரச அதிபர் அன்ரன் அல்பிரட் கூறினார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

**தேவை**

பாவித்த சிம்பேச, ஒருக்க கோல், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொலிவிடு போனா சங்கிலிமுனைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும். எல்லு சத்தியன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்புத்துறை வீதியூடாக, யாழ்ப்பாணம். (B.2169)

**பழைய புத்தக விற்பனை நிலையம்**

பழைய புத்தகங்கள், கொப்பிகள் பேப்பர் போத்தல் செம்பு பித்தளை கோழித்தீன் சீமெந்து உறைகள் உரப்பைகள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா பழைய புத்தக விற்பனை நிலையம், 57 ஸ்ரான்லி றோட் (இலங்கை வங்கி முன்னேன்) யாழ்ப்பாணம்

(B-2301)

**விலங்கியல் வகுப்பு**

G C E.(A/L 91 92மீள்வகுப்புகளுக்கான விலங்கியற்பாடம் அனுபவம் வாய்ந்த பட்டதாரி, கல்லூரி ஆசிரியரால், தனிப்பட்ட முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- 63, பொற்பதி வீதி, கொக்குவில் (R-1219)

# தொழில் கல்வி நெறிக்கு 100 பேர் மட்டுமே தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தொழிலாளர் கல்வி நெறிக்கு இருநூற்றி அறுபது பேர் விண்ணப்பித்துள்ளனர் இதில் நூறு பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு இம்மாத இறுதியில் இவர்களுக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கான பயிற்சி ஒரு வருடம் நடைபெறும் எனவும் பயிற்சியின் இறுதியில் சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் எதிர்காலத்தில் வேலை வாய்ப்பு, பதவி உயர்வு ஆகியவற்றுக்கு இச் சான்றிதழ்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது. (ச)

# சுங்க அதிகாரிகளுக்கு பொறுப்பெதுவுமில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுங்கத் திணைக்கள அதிகாரிகளுக்கு இப்பொழுது எந்தவித வேலையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது

இதுபற்றி இத்திணைக்களத்தலைவர் நேற்று தெரிவிக்கையில் தமக்கு வெகு நாட்களுக்கு முன்னர் சிறிலங்கா கடற்படையிடம் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளதாகவும் அதன் பின்னர் இன்றுவரை எந்த அறிவுறுத்தலும் கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தற்போது கடலில் பிடிக்கப்படும் கள்ளக்கடத்தல் பொருட்கள் நேரடியாக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் இதனால் தமக்கு எந்தவித அலுவலும் இல்லை எனக் கூறினார்.

(லோ)

**தவறிவிட்டது**

வேலுப்பிள்ளை ஸ்ரீகௌரி (மண்டைதீவு) ஆகிய எனது 697331980 V இலக்கமுடைய அடையாள அட்டை பேசாலை மார்ட்டின் வேனில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சமநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (A/L பரீட்சைக்கு அவசியப்படுகிறது)

(R- 1309)

# நன்றித் திருப்பலி



அருட்சகோதரி **அலோசியா லூஸ்லி**

சென்ற மாசி மாதம் 9ஆம் நாள் இறைவனின் திருப்பாதம் சேர்ந்த சங்கைக்குரிய தாயார் அலோசியா லூஸ்லி அவர்களின் மரித்த 60ஆம் நாள் நினைவையொட்டி அன்னையவர்களின் புனிதம் நிறைந்த இவ்வுலக வாழ்விற்காகவும் அவரின் தன்னிகரில்லா அன்புப் பணிகளாகவும் நன்றி கூறி எதிர்வரும் சித்திரைத் திங்கள் 8ஆம் திகதி புனித மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 5-30 மணிக்கு யாழ் ஆயர் மேன்மை தங்கிய தியோகுப்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி நடைபெறவுள்ளது. இத்திருப்பலியில் பங்கேற்று எம்முடன் இறைவனுக்கு நன்றி கூற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். சிறப்பாக மரித்த அன்னை அலோசியாவை அறிந்தவர்கள், அவரின் அன்புப்பணி பெற்றவர்கள், நண்பர்கள் அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாகாணத் தலைவியும் அருட்சகோதரிகளும்
திருச்சிலுவை கன்னியர் மடம்
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(R-1310)

# கேள்வி அறிவித்தல்

## கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்

### யாழ்ப்பாணப்பிரதேசப் பாடசாலைகட்குத் தேவையான உருக்குத் தளபாடங்கள் வழங்குதல்

யாழ். கல்வித்திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆறு கோட்டக்கல்வி அலுவலகங்களினதும் மேற்பார்வையில் உள்ள பாடசாலைகட்குத் தேவையான கீழே காட்டப்பட்டுள்ள உருக்குத் தளபாடங்களை வழங்குவதற்கும், விநியோகிப்பதற்குமாக முத்திரையிடப்பட்ட கேள்விகள், உருக்குத்தளபாட உற்பத்தியாளர்கள்/ விநியோகஸ்தர்களிடமிருந்து 03-05-1991ஆம் திகதி காலை 10மணி வரை யாழ் கல்வித்திணைக்கள கேள்விச்சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

02. தயாரிப்பாளர் / விநியோகஸ்தர்கள் ஒவ்வோர் தளபாடங்களுக்குமாக தனித்தனியே அவற்றின் கூறுவிலைகளையும், ஒவ்வோர் கல்விக்கோட்டப் பாடசாலைகட்கு கொண்டு சென்று விநியோகிப்பதற்கான ஏற்றுக்கூலிஉட்பட அவற்றிற்கான கூறுவிலைகளையும், வெவ்வேறாக தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

கல்விக் கோட்டங்கள்:
1. யாழ்ப்பாணம்
2. சாவகச்சேரி
3. மருதனாமடம்
4. பண்டத்தரிப்பு
5. வேலணை
6. பருத்தித்துறை

03. இத்திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் (இணைப்பிரதிகளில்) இத்திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் உரிய நேரத்திற்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும் கேள்விப்பத்திரங்களை அனுப்பும் கடித உறையின் இடதுகை மேல் மூலையில் "பாடசாலைத் தளபாடங்களுக்கான கேள்விகள்" என எழுதுதல் அவசியம். கேள்வி முடிவு நேரத்தின் பின்னர் கேள்விகள் திறக்கப்படும் அச்சமயம் கேள்வியாளர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

04. கேள்விப்படிவங்கள், நிபந்தனைகள், மாதிரிப்படங்கள், விபரக்கூற்றுக்கள் ஆகியவைகள் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக 50 ரூபாவும் மீளளிக்கத் தக்க வைப்புப் பணமாக 200 ரூபா யாழ்ப்பாண பிரதேசக் கல்விப்பணிப்பாளரின் பெயரில் யாழ். இலங்கை வங்கியில் இருந்து பெறப்பட்ட கொடுப்பனவுக்கட்டளைகளாக 26-04-1991 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னர் இவ்வலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச்சீட்டினை (பொது 172) சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளமுடியும்.

05. தேவைப்படும் தளபாடங்கள் பற்றிய விபரம்:
(அ) மாணவர் உருக்கு கதிரைகள்.
(ஆ) மாணவர் உருக்கு மேசைகள்.
(இ) பாலர் உருக்குக் கதிரைகள்.
(ஈ) பாலர் உருக்கு மேசைகள்.

இ. சுந்தரலிங்கம்
பிரதேச கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம்
யாழ்ப்பாணம்.
04-04-1991

(B - 2332)




**1991 - 04 - 06**



2ஆம் லெப்.
**சின்னக்கோபு**
(செந்திவடிவேல் ஸ்ரீதரன் - வல்வெட்டித்துறை)

1986ஆம் ஆண்டு இதே நாளில் தொண்டமனாறில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தின் எறிகணைத் தாக்குதலில் வீரமரணமடைந்த

பட்டாபி (செ. சாந்தகுமார் - நெல்லியடி)
2ஆம்லெப்.சின்னக்கோபு (செந்திவடிவேல் ஸ்ரீதரன் - வல்வெட்டித்துறை)

1987ஆம் ஆண்டு கள்ளிச்சை - வடமுனையில் சிறிலங்கா படையினருடனான மோதலின் போது வீரமரணமடைந்த

தேவன் (புத்திரசிகாமணி சூரியகுமார் - ஏறாவூர்)

இதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் சிறிலங்கா படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரமரணமடைந்த

அன்ரன்/ரஞ்சன் (அருச்சுனன் ரஞ்சன் - யாழ்ப்பாணம்)

1988ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த

லெப்.நந்தன் (தம்பிராசா சிவானந்தன் - சண்டிலிப்பாய் மத்தி)

1989ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

கபில் (சிவகுமார் - வட்டுக்கோட்டை)

ஆகியோரை

**இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2325)

# இலங்கைத் தமிழ் அகதிகள் கட்சி சாராது தமிழக மக்களின் அன்புக்குரியவராக வேண்டும்

-ராமதாஸ்

(சென்னை)

தேர்தல் காலங்களில் இலங்கைத் தமிழ் அகதிகள் எந்த அரசியல்கட்சிகளையும் சாராது தமிழக மக்களின் நட்பிற்கு உரியவர்களாக இருக்க வேண்டும் என்று தமிழக புனர்வாழ்வுத்துறை ஆணையாளர் சி. என் ராமதாஸ் கேட்டுக் கொண்டார்.

கடந்த புதன்கிழமை தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதி முகாம்களை பார்வையிட்ட ராமதாஸ் செய்தியாளர்கள் மத்தியில் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இலங்கைத் தமிழக அகதிகளுக்காக இதுவரை 21 கோடி ரூபாவை செலவழித்திருப்பதாகவும் இதில் 16 கோடி ரூபாவை மத்திய அரசாங்கம் வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.


உங்களின் தேவையே
எங்களின் சேவை!

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு எமது ஸ்தாபனம் வாரநாட்கள் முழுவதும் காலை 8 மணி முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**எழிலகம்**

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

(B/2323)


## கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்களின் விசேட கூட்டம் (06 - 04 - 91) இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது.

இதேவேளை அதே நாள் காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் கொத்தணியைச் சேர்ந்த சகல அதிபர்களையும் மேற்படி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சமுகமளிக்குமாறு கோட்டக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா கேட்டுள்ளார்.

## மாணவி மரணம்

வேகமாக வந்த வாகனம் மோதியதில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மாணவி கடந்த புதன் மரணமானார்.

கொடிகாமம் சந்தியில்புதன் கிழமை மாலை 3மணியளவில் நடைபெற்ற இவ்விபத்திற்படு காயமடைந்த மரணமானவர் வரணியைச் சேர்ந்த யோகராஜா மாலினி(வயது 14) என்ற பாடசாலை மாணவி ஆவார்.

## மீனவர் கொலை

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூருக்கு அருகே சிங்கள மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் இந்தச் சம்பவத்தில் பதினொரு மீனவர்கள் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டதாகவும் ஒ பது பேர் காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது இச்சம்பவத்தின் பின் காணாமற்போயுள்ள பல மீனவர்களைத் தேடும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிக்கு 1991-06-24ஆம் தேதிவரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்

பயிர்த் தொழில் முறையில் பேராசிரியர்
(PROFESSOR OF AGRONOMY)

சம்பள அளவுத்திட்டம் :

ரூபா 12,200 — 6 × 300 14.000/- மாதமொன்றுக்கு மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களும்விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேட்டஉதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை தபாலில்பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு ரூபா 2-00 முத்திரையொட்டப் பெற்ற 23 x 10 ச மீ அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்.

குறிப்பு; ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். 1991-04-04 (B-2324)


# அதிகாலையில் நாவற்குழியில் விவசாயியிடம் மோசடி

மருதனார்மடுவிலிருந்து, 3250 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களும், மண்ணெண்ணையும் வாங்கிக் கொண்டு வந்த விவசாயி ஒருவர், இப்பொருள்களுடன் 4500 ரூபா பெறுமதியான சைக்கிளையும் பறிகொடுத்த வெறுங்கையோடு வீடு வந்து சேர்ந்தார்.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த அ. இராசையா 65 வயது) என்பவருக்கே இக்கதி நேர்ந்தது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் நாவற்குழி சந்தியில் நின்ற இனந்தெரியாத ஒருவர் இவருக்கு உதவுவதாகச் சொல்லி சைக்கிளையும், பொருள்களையும் வாங்கிக் கொண்டு தலைமறைவாகி விட்டாராம்.

இவற்றைப் பறிகொடுத்த விவசாயி இப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகத்தில் முறையிட்டுள்ளார். இச்சம்பவம் போன்று கடந்த மாதத்திலும் பல பிரயாணிகளின் சைக்கிள்கள் வழிப்பறி செய்யப்பட்டுள்ளன (செ. த. மை)

## அபராதம்

(செ. த. மை.)

350 கிராம் பாணை 11 ரூபாவாக விற்பனவு செய்த பாண் பேக்கறி விற்பனையாளருக்கு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நாவற்குழி சந்தியிலுள்ள அருணா பேக்கறி அன் ஸ்ரோர்ஸில் பாண் 11 ரூபாவாக விற்பனை செய்த பொழுது நாவற்குழி கிராமியப் பொறுப்பாளரினால் கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்பந்தப் பட்டவருக்கு 1000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், கட்டுப்பாட்டு விலையைச் சகல வர்த்தகர்களும் கடைப் பிடிக்குமாறு கேட்டுக் கொண்டார். கடந்த இரண்டாம் திகதி இச்சம்பவம் இடம் பெற்றது.

## இளைஞர் காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப்பகுதியில் இராணுவ முகாம் அருகே சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி கால்களை இழந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இ சிதம்பரலிங்கம் என்ற (18 வயது) இளைஞரே இந்த மிதி வெடித்தாக்குதலுக்கு உட்பட்டவராவார் (லோ)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தாய் அன்பின் அணைப்பில்
15 - 09 - 1972

தாயக மண்ணின் அணைப்பில்
07 - 03 - 1991

வீரவேங்கை
**காராளசிங்கம்**
(முருகேசு யோகராஜா)
சங்கத்தார்வயல். இயக்கச்சி)

சங்கத்தார் வயலெம்பதியிலே
திங்களெனத்தவழ்ந்தவன்
இல்லங்களில் யோகனாய்
திரிந்தவன்
கட்டுவன் களத்தினில் ‘காராளசிங்கனின்’
கொட்டிய உன் குருதியெலாம்
புதிய வேங்கைகளாய் எழுமே!
எங்கள் கண்ணீர் மலர்கள்
உன் சாம்பல் மேட்டினில் விழுந்ததினால்
நீ மீண்டும் எழுவாய்!

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்
— குடும்பத்தினர்
(R-1304)

முத்தமிழ் விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்!

அதி உன்னத சத்துணவு

**ஜீவாகாரம்**

வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
கர்ப்ப தாய்மார்களுக்கும்
பாலூட்டும் தாய்மார்களுக்கும்
போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு.

இது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும்.

கிடைக்குமிடம்:
**அண்ணா கோப்பி கடை**
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(B-2315)

### சிறுதானிய உற்பத்திக்கென

## தகுதியற்றவர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன

யாழ். மாவட்டத்தில் உள்ள சிறுதானியங்களின் உற்பத்திக்கென 1500 ரூபா மாதாந்த வருமானம் பெறும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கென திட்டமிடப்பட்டிருந்த உரம், சிறுதானியவகை விதைகள், மண்ணெண்ணை ஆகியன தகுதியற்ற பலருக்கு வழங்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

அண்மையில் இந்த உரம் மற்றும் தானியவகைகள் யு.எஸ். எயிட் நிறுவனத்தால் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் சில சங்கங்கள் ஊடாகவும் வழங்குவதற்கு ஏற்பாடாகி இருந்தது. இந்த ஏற்பாட்டில் இணங்க மாதாந்தம் 1500 ரூபாவிலும் குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளுக்கு இலவச விநியோகம் செய்ய வேண்டும். ஆனால் அரச பதவிகளில் இருந்து மாதாந்தம் இரண்டாயிரம் ரூபாவுக்கு மேலாக வருமானம் பெறும் ஓய்வூதியர்களுக்கும் மற்றும் இந்த கொடுப்பனவுகளுக்கு தகுதி அற்ற பலருக்கும் வழங்கப்பட்டுள்ளதாக பல்வேறு இடங்களில் முறையீடு செய்யப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் இவ்விடயம் குறித்த விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### கண்ணீர் அஞ்சலி

செல்வி யோ. மாலினி

எமது நிறுவனத்தில் மிகவும் திறமையுடன் கல்விகற்று சிறப்புடன் திகழ்ந்த செல்வி யோ. மாலினி 03-04-91 அன்று எதிர்பாராத விபத்தில் மரணமானார். இவரின் மறைவுக்கு நிறுவனம் தனது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றது.

உயர்கல்வி நிலையம்,
கொடிகாமம்.

ஆசிரியர்கள், நிர்வாகி,
மாணவ, மாணவிகள்.

(R-1308)

### கலிபர் தாக்குதல்

வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதி நோக்கி கடலில் நின்ற சிறிலங்கா கடற்படை விசைப் படகு நேற்று முன்தினம் மாலை 2.30 மணியளவில் 50 கலிபர் தாக்குதல் நடாத்தியது. சேதம் எதுவும் இல்லை.

## 15 துவிச்சக்கர வண்டிகள் 7 மோட். சைக்கிள்கள் சேதம்

(பூநகரி)

சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களினால் நடந்தசெவ்வாய்க்கிழமை மண்டைதீவு, சங்குப்பிட்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் 15 சைக்கிள்களும் 7 மோட்டார் சைக்கிள்களும் சேதம் அடைந்துள்ளன. அத்துடன் சேவையில் ஈடுபடுத்தப்படும் படகு ஒன்றும் சேதம் அடைந்துள்ளதாகவும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன. (செ.த.மை) (71)

### சந்தைப்படுத்தும் முகாமையாளர்

## தேவை

வளர்ந்துவரும் நிறுவனமொன்றிற்கு ஒரு சந்தைப்படுத்தும் முகாமையாளர் தேவை. இவர் வர்த்தக நெறியை ஒரு பாடமாக கொண்டவராகவும், பிரபல நிறுவனங்களில் கொள்வனவு, விற்பனவு, சந்தைப்படுத்தல் துறைகளில் குறைந்தது 10 வருட அனுபவமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

தகுதியுடையோர் 21-04-91 க்கு முன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும், சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல 113
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

(B- 2331)

## வளமான வாழ்விற்கு நல்லதோர் வழிகாட்டி

# "ஷப்றா"

### உங்கள் நிதி வளத்தைப் பெருக்க எங்கள் முதலீட்டுத் திட்டங்களை நாடுங்கள்

நிலையான வைப்பு

| காலம் - மாதம் | மாதாந்தம் | முதிர்ச்சியில் |
|---|---|---|
| 03 | — | 17% |
| 06 | — | 18% |
| 12 | 18% | 20% |
| 24 | 21% | 23% |
| 36 | 22% | 24% |

கடந்த மூன்று ஆண்டுகளுக்கான நிதி நிலை விபரம்

| | 1986/87 (ரூபா) | 1987/88 (ரூபா) | 1988/89 (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனமும் மொத்த ஒதுக்கமும் | 11,342,354 | 14,354,927 | 23,306,910 |
| பொதுமக்கள் வைப்புகள் | 100,577,492 | 110,897,760 | 116,890,354 |
| வங்கிக் கடன்கள் | 7,718,284 | 6,539,639 | 11,364,064 |
| அரச வங்கியிலான நிலையான வைப்புகளும் மத்திய வங்கி உண்டியல்களும் | 16,613,250 | 14,832,400 | 13,700,000 |
| வங்கி மீதிகள் | 10,911,712 | 3,189,084 | 1,894,245 |
| மொத்தச் சொத்துகள் | 127,175,677 | 143,822,862 | 162,239,787 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் இலாபம் | 19,310,887 | 23,173,830 | 23,700,689 |
| வைப்பாளருக்குச் செலுத்திய வட்டி | 16,880,875 | 20,025,480 | 20,833,024 |
| வரி செலுத்திய பின் தேறிய இலாபம் | 2,330,012 | 3 148.350 | 2 867 656 |
| பகிரப்பட்ட இலாபம் | — | 1,775,100 | 1 508,110 |

பணிப்பாளர் சபை

எஸ். பி. ஈ. கருணாரத்ன
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
எஸ். பாலசுப்பிரமணியம்,
A I B. (Lond.), முகாமைப் பணிப்பாளர்
ஜே. டி. நவரட்ணம்,
A. I. B (Lond.), பொதுமுகாமையாளர்
எ. எம். எச். பாரி,
B. A. (Hons )
ஆர். பாலசுப்பிரமணியம்.

1988 ஆம் ஆண்டு 78 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது
பதிவு இல NBS / R/90/021

மேலதிக விபரங்களைப் பெற

## ஷப்றா

### யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

(B-2055)

## "நிதர்சனம்" நிறுவனத்தால் பின்வரும் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. செய்தியாளர் (Journalist)

(அ) பத்திரிகை நிறுவனமொன்றில் உதவி ஆசிரியராக கடமையாற்றிய அனுபவம் அல்லது பத்திரிகை நிறுவனமொன்றில் பத்திரிகையாளராக 5 வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் அல்லது இதற்குச் சமமான தகைமை.

(ஆ) ஆங்கில அறிவு சிறப்புத் தகைமையாகக் கணிக்கப்படும்.

2. நிகழ்ச்சி மதிப்பீட்டாளர் (Programme Editor)

(அ) கலை, இலக்கியத் துறைகளில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) கலைஞர்களிடமிருந்து பெறப்படும் ஆக்கங்களை மதிப்பீடு செய்யவும், தணிக்கை செய்யவும், செப்பனிடவும் போதிய ஆற்றலும், அனுபவமும் இருத்தல் வேண்டும்.

3. பிரதி எழுதுபவர் (Script Writer)

(அ) கலை, இலக்கியத் துறைகளில் அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த எழுத்தாற்றல் இருத்தல் வேண்டும்.

4. இசைத் தயாரிப்பாளர் (Music Organizer)

(அ) "இசைக் கலைமாணி"ப் பட்டம் அல்லது வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரம்.

(ஆ) இசைத் துறையில் 7 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உடையவருக்கு கல்வித் தகைமையில் விலக்களிக்கப்படும்.

5. தகவல் சேகரிப்பாளர் (Information Officer)

(அ) க.பொ.த. (சா.த) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி

(ஆ) பொது விவேகமும், ஆங்கில அறிவும் சிறப்புத் தகைமைகளாகக் கருதப்படும்.

6. மக்கள் தொடர்பு அலுவலர் (Public Relations Officer)

(அ) க.பொ.த. (சா.த) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகியவற்றில் திறமைச் சித்தி.

(ஆ) ஆங்கில அறிவு சிறப்புத் தகைமையாகக் கருதப்படும்.

(இ) மக்களுடன் பழகும் தன்மை கவனத்தில் எடுக்கப்படும்.

★ ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்துடன் தங்களது தகைமைச் சான்றிதழ் பிரதிகளையும், அனுபவச் சான்றிதழ் பிரதிகளையும் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

★ விண்ணப்பங்கள் யாவும் முழுமையான விபரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்டு 1991—04—15 ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

★ தகுதிக்கும், அனுபவத்திற்குமேற்ப வேதனம் வழங்கப்படும்.

பொறுப்பாளர்.
"நிதர்சனம்"
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

1991-04-03

(B-2319)

## சிந்தனைக்கு

அபத்தம் பேசுவதுகூட அவ்வளவு அருவருப்பானதல்ல; கொள்கைகளின் பெயரில், அபத்தம் பேசுவதுதான் அருவருப்பானது.

— ஜீன்ரோஸ்டேண்ட


ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 06-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# அடக்கு முறைக்கெதிராக மாணவர் அணிதிரண்டு வருகின்றனர்

## -விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்

(நமது நிருபர்)

தமிழ் இனத்திற்கு எதிராக இழைக்கப்படும் அடக்கு முறையை உடைக்க தமிழ் மாணவர் உறுதியான அணியாகி திரண்டு வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டமானது அளப்பரிய தியாக வரலாறாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. புரட்சிகரமான புதிய தமிழ்ச் சமுதாயம் உருவாகி வருகின்றது. மாணவர்கள் காலத்தால் புதிய சக்தியாக உருவாக்கப்படுகின்றனர்.

இவ்வாறு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் கடந்த 27 ஆம் திகதி கீரிமலையை நோக்கி முன்னேற முனைந்த இராணுவத்துடனான மோதலில் காயமடைந்த போராளிகளை மீட்க களம் சென்று வீரமரணமடைந்த வேலாயுதம் ஜெகநாதனுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜெகநாதன் மகாஜனக் கல்லூரி க. பொ. த. உயர்தர வகுப்பு வர்த்தக மாணவன். களத்தில் காயமடைந்த போராளிகளுக்கு உடன் உதவி செய்யும் முதலுதவிப் பிரிவில் கடந்த பல காலமாக இயங்கி வந்தவன். தமிழ் மண்ணில் விழும் ஒவ்வொரு செங்குருதித் துளியும் சிவந்த எம் விடியலை வேகமுள்ளதாக்கும் என்பதை உணர்ந்து உதிரவாழ்வுடன் மாணவனாய் இருந்து சென்றே செயற்பட்டான்.

விடுதலைப்புலிகள் மாணவ இயக்கத்தவரான ஜெகநாதனின் வீரமரணத்தை இட்டு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் தன் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

"விடுதலைப் புலிகள் தலைமையின் செயற்பாடு இராணுவ பலத்தில் மாத்திரம் அமைந்ததொன்றல்ல" என்ற தலைப்பில் இன்று வெளிவரவிருந்த கட்டுரை தவிர்க்கப்பட முடியாத காரணத்தால் பிரசுரமாகவில்லை என்பதை அறியத் தருகின்றோம்.

(ஆ-ர்)

# கடற்கொள்ளையர் போதிக்கும் நாகரிகம்

வளைகுடாவில் நிரந்தர போர் நிறுத்தத்திற்கு ஈராக் மீது கடும் நிபந்தனைகளை விதிக்கும் அமெரிக்காவின் தீர்மானத்தை முழுமையாக ஏற்றுக் கொண்ட ஐ. நா. பாதுகாப்புச்சபையின் உறுப்பு நாடுகள் - கியூபா தவிர - இத் தீர்மானங்கள் ஈராக் மக்களுக்கு எதிரான தீர்மானங்கள் அல்ல ஈராக்கின் சதாம் ஹுசைன் தலைமைக்கு எதிரான தீர்மானங்கள் எனத் தெரிவித்துள்ளன.

இத்தீர்மானம் பற்றிக் கருத்து வெளியிட்ட பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் சதாம் ஹுசைன் தலைமை ஈராக்கில் நிலவும்வரை "நாகரிக சமுதாயம்" ஈராக்கை தம்முடன் சேர்த்துக் கொள்ளாது எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் ஈராக்கின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடாது என்றும், ஆனால் சதாம்ஹுசைனின் ஆட்சியை இராணுவ அதிகாரிகள் கவிழ்க்க வேண்டும் எனவும், தாம் அதற்கு உதவி புரியத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானம் தொடக்கம் உலகின் பல நாடுகளின் தலைவர்கள் வரை சதாம் ஹுசைன் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட வேண்டும் எனக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ளார்கள். இதற்காக எந்தச் சுமையையும் ஈராக் மீது சுமத்த அவர்கள் தயாராகவுள்ளனர்.

ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் குவைத்தை ஆக்கிரமித்ததன்மூலம் ஈராக் மக்களுக்கும், நாட்டிற்கும் பெரும் அழிவை ஏற்படுத்தினார். நாடு சீரழிந்து போய் விட்டது. சிறுபான்மை மக்கள் இரும்புக்கரம் கொண்டு நசுக்கி அழிக்கப்படுகின்றார்கள். இதனால் ஈராக்கின் அதிபர் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டும் இராணுவ மேலாதிக்கம் அற்ற அரசாங்கம் உருவாக வேண்டும் என மக்கள் போராட்டம் நடத்தி ஆட்சியை மாற்றி அமைப்பது வேறு விடயம். அது ஏற்புடையதும் ஆகும்.

ஆனால், ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனை பதவியில் இருந்து நீக்குவதற்காக போரினால் சீரழிந்து போயுள்ள ஒரு நாட்டின் மீது தாங்க முடியாத சுமைகளைச் சுமத்துவதும் அதற்கு ஆதரவுகொடுப்பதும் "நாகரிகமான நாடுகள்" எவையும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் அல்ல.

போரினால் ஈராக்கின் பொருளாதாரச் சமூகக் கட்டமைப்புக்களே அழிந்து போய்விட்டன. இந்த நிலையில், ஈராக் அரசாங்கத்தின்மீது சுமைகளைச் சுமத்துவதென்பது மக்கள்மீது சுமத்துவதாகவே அமையும். ஈராக்கின் பெற்றோலிய வருவாயில் ஒரு குறிப்பிட்ட பகுதியை போர் நஷ்டஈடாக ஒதுக்குதல் என்பது சதாம் ஹுசைனின் சொந்தப் பணத்தில் இருந்து ஒதுக்குவதாகப் பொருள்படாது. ஈராக்கின் வளத்தில் இருந்தே அது ஒதுக்கப்படுகின்றது. இதனால் பாதிக்கப்படப்போவது ஈராக் மக்களே ஒழிய தனிப்பட்ட ரீதியில் சதாம் ஹுசைனோ அவரது குடும்பமோ அல்ல.

மேலும் அதிபர் சதாம் ஹுசைனைக் கவிழ்க்க ஈராக்கிய இராணுவ அதிகாரிகள் முன்வர வேண்டும் என்ற அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்சின் கோரிக்கையும் ஈராக் மக்கள்மீது அவர் கொண்டுள்ள 'தீவிர பற்றுதலை'யே காட்டுகின்றது. ஈராக்கில் ஜனநாயக அரசாங்கம் உருப்பெற வேண்டும் என ஜோர்ஜ்புஷ் கோரிக்கை விட்டிருந்தால் அது மக்களின் தரப்பில் ஏற்புடையதாக இருக்கும். இதைவிடுத்து இராணுவத் தலைமைக்கு மாற்றீடாக இன்னுமொரு இராணுவத் தலைமையைக் கோருவது தமக்கிசைவான ஒரு அடக்குமுறைத்தலைமையை அமெரிக்காதேடுவதையே வெளிக்காட்டுகின்றது.

இந்நிலையில், சதாம்ஹுசைனை விரட்டுவதற்காக மேற்கு நாடுகளின் விருப்பத்தின்பேரில் ஐ. நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது ஈராக் மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள அநாகரிகமான சுமைகள் என்றே சொல்லவேண்டும்.

அத்தோடு, 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்தைக் (மொசப்பித்தோமியா) கொண்ட இன்றைய ஈராக் வழித்தோன்றல்களுக்கு, ஆயிரத்தி ஐந்நூறு வருடங்களுக்கு முன்னர்கூட ஆடையின்றி நாடோடிகளாக அலைந்தவர்களின் சந்ததியில் வந்தவரும், ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் கடற்கொள்ளைக்காரர்களாகவும், ஆக்கிரமிப்பின் மூலமும் உலக செல்வத்தைக் கொள்ளையிட்டவர்களின் பரம்பரையில் வந்தவருமான பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் நாகரீகச் சமூகத்தைப் பற்றிப் போதிக்கின்றார். என்ன செய்வது தோல்வியடைந்த ஈராக்கியர் ஜோன் மேயரின் போதனைகளையும் கேட்டுத்தான் ஆகவேண்டியுள்ளது.

# வடக்கில் 7ஆவது கட்டம் வடமத்தியில் 40ஆவது கட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இப்பொழுது இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்பொழுது ஏழாவது கட்ட உணவு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் குடும்பங்கள் பொலநறுவை அனுராதபுரம் ஆகிய இடங்களில் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களுக்கு இடம்பெயர்ந்த இலவச நிவாரணம் நாற்பதாவது கட்டத்தையும் தாண்டிவிட்டதாக செய்தி வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (லோ)

# தடுத்து வைக்கப்பட்ட 17 பேர் இன்று விடுதலை

(நமது நிருபர்)

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிலர் இன்று காலை 10-00 மணியளவில் யாழ். மாவட்டச் செயலகத்தில் விடுதலை செய்யப்படுவர். அவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு:

புண்ணியமூர்த்தி திருநாவுக்கரசு (ஊளாய வடக்கு, அச்சுவேலி), சின்னத்தம்பி தவராஜா (மயிலம்பாவெளி, கன்னாமுனை, மட்டக்களப்பு). சின்னராஜா ஜெயராசா (கதிரிப்பாய், அச்சுவேலி), மாணிக்கம் செல்வமாணிக்கம் (3-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை), டேவிட் வல்லிபுரம் ஜெயபாலன் (நவாலி தெற்கு மானிப்பாய்). அமலன் குரூஸ் டெஸ்மன் (5 ஆம் வட்டாரம், கோவில் வீதி, மன்னார்), சித்திரன் சதீசன் (வடலியடைப்பு, சண்டிலிப்பாய் மேற்கு, பண்டத்தரிப்பு). செல்லையா குகநாதன் (142, இலிறேசட், திருகோணமலை), பொன்னுத்துரை பஞ்சலிங்கம் (1054, கிருநகர், கிளிநொச்சி), கதிரேசன் கொன்சன் (வின்சன்ட் வீதி வைரவர் கோவிலடி, கிளிநொச்சி). வடிவேல் நல்லதம்பி (டிப்போவீதி, செல்வநகர், கிளிநொச்சி), வேலு இராஜ்குமார் (தம்மனைச் சோலை, தாண்டிக்குளம் வவுனியா), செல்லத்துரை ரவிக்குமார் (மகாறம்பைக்குளம், வவுனியா), சண்முகம் பாஸ்கரன் (பெரியபோரதீவு, காளிகோவில்வீதி, மட்டக்களப்பு), செல்வராசா பவளதம் (88, திருமலைவீதி, திருக்கோணமலை), நாகன் தினேஸ்வரன் (சங்குவத்தை வடக்கு, மயிலிட்டி, காங்கேசன்துறை). மூருகசாமி பழனிச்சாமி (சுந்தரலிங்கம், மல்வம் பேக்கரி, உடுவில், சுன்னாகம்.)

# உருவப் படங்கள் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைப் பேராசிரியர்களாக பணியாற்றி அமரத்துவமடைந்த பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் க. கைலாசபதி ஆகிய இரு தமிழறிஞர்களதும் உருவப்படங்களைத் தமிழ்த்துறையில் 08 04 1991 காலை 10 00 மணிக்கு திரை நீக்கம் செய்து வைக்கும் நிகழ்ச்சி இடம் பெறவுள்ளது.

## பொதுக் கூட்டமும் உறுப்பினர் தெரிவும்

இலங்கை பொதுசேவைத் தொழில் தொழிலாளர்சங்கம் யாழ் மாநகர சபைசுகாதாரப் பகுதித் தொழிலாளர் கிளையின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய உறுப்பினர்கள்தெரிவும் இன்று சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## விலைப் பட்டியல் தொங்க விடவும்

(மானிப்பாய்)

மானிப்பாய் நவாலிப் பகுதியில் உள்ள வர்த்தகர்களை அவரவர் வர்த்தக நிலையங்களின் முன் விலைப் பட்டியல்களை உடனடியாகத் தொங்க விட வேண்டும் என மானிப்பாய் வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

# அடுத்த வார மத்தியில் ஆணைக்குழு கூட்டம்

(கொழும்பு)

இலங்கை - இந்திய பொருளாதார ஆணைக்குழு கூட்டம் வரும் 8,9,10 ஆம் திகதிகளில் இந்தியாவில் நடைபெற உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேர்னாட் தலைமையிலான தலைமைக் குழு வெள்ளிக்கிழமை புதுடில்லி சென்றுள்ளது. இருநாடுகளுக்கிடையிலான பொருளாதார வர்த்தக ஒத்துழைப்புக்கள், கூட்டு நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக ஆராயப்படும் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# "நானொரு நிரபராதி" - எர்ஷாத்

(டாக்கா)

"ஊழல்குற்றச் சாட்டுகளில் நானொரு நிரபராதி" என முன்னாள் பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் பிரகடனம் செய்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டபின் விடுத்த அறிக்கையிலேயே திரு. எர்ஷாத் மேற்கண்டவாறு கூறியுள்ளார். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் டாக்காவில் இந்தப் பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது. தனிப்பட்ட வீடொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி அண்மையில் தேர்தல் ஆணையாளர்முன் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். அவருடன்பாராளுமன்றத்தின் மூன்றாவது எதிர்க்கட்சியாக முப்பத்தைந்து ஆசனங்களைப் பெற்ற அவரது ஜாதிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். பின்னர் செய்தியாளரிடம் பேசுகையில் எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறமுடியும் எனத்தாம் நம்புவதாகத் தெரிவித்தார்.

## சம்பள உயர்வு

(கொழும்பு)

பட்டதாரி பயிற்சி ஆசிரியர்களுக்கு மூன்நூறு ரூபா சம்பள உயர்வை வழங்க வேண்டுமென்ற திட்டம் கடந்த புதன் அமைச்சரவையினரால் அங்கீகாரம் செய்யப்பட்டுள்ளது இத்தகவலை நேற்று முன்தினம் கொழும்பு கிராண்ட் ஓரியண்டல் மண்டபத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில் ஜனாதிபதியினால் முன் வைக்கப்பட்ட இத் திட்டம் கடந்த புதன் அமைச்சரவையினால் அங்கீகாரம் செய்யப்பட்டதாகக் கூறினார்.

## அமெரிக்கரிடம் ஒரு கிலோ போதைபொருள்

(கொழும்பு)

'ஏயர்லங்கா' விமானத்தில் பாங்கொக்கிற்குப் பயணம் செய்யவிருந்த அமெரிக்கப் பிரஜையிடமிருந்து ஒரு கிலோ போதைப்பொருளை இலங்கைச் சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்திலுள்ள போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரிடம் இந்த அமெரிக்கப்பிரஜை ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பட்டினியில் சிக்கியுள்ள 5 லட். குர்திஷ் மக்கள்

(தெகிரான்)

ஈரானிய எல்லையில் குடியிருக்கும் லட்சக் கணக்கான குர்திஷ் இன மக்கள் பட்டினியால் வாடும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஈரானில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வளைகுடாப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட குர்திஷ்களின் கிளர்ச்சியை ஈராக் அடக்கியதை தொடர்ந்து ஈரானிய எல்லையில் 10 லட்சம் குர்திஷ் இன மக்கள் அகதிகளாக வந்துள்ளனர் என்றும் ஐந்துலட்சத்திற்கும் அதிகமானோர் பட்டினியால் வாடுகின்றனர் என்றும் ஈரான் தெரிவித்துள்ளது

ஈரானுக்குள் ஏற்கனவே ஒரு லட்சம் அகதிகள் போய்ச் சேர்ந்துள்ளனர் என்றும், ஈரானிய எல்லை திறந்தே இருக்கும் என்றும் ஈரான் தெரிவித்தது

இதேவேளை ஈரானிய வெளியுறவு அமைச்சர் அலி அக்பர் வெலாயாதி நெருக்கடியை சமாளிக்க உதவுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மரண தண்டனை

(அம்பாறை)

சிறிலங்கா இராணுவத்தினருக்கு காட்டிக் கொடுக்கும் குற்றத்திற்காக அம்பாறை மாவட்டத்தில் உளவாளியொருவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மரண தண்டனை அளித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோளாவில் என்ற இடத்தில் வைத்து கிரேட் என்ற உளவாளிக்கே இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## பாரதீய கட்சி அங்கீகாரத்தை ரத்துச்செய்யக் கோரிக்கை

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சி தனது சின்னத்தை சமயசார்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தியிருப்பதால் அதற்கான அங்கீகாரத்தை ரத்துச்செய்ய வேண்டுமென்று இந்திராகாங்கிரஸ் கட்சி தேர்தல் கமிஷனிடம் கோரியுள்ளது.

இத்தகையபிரச்சினைகள் ஒரு அரசியல்கட்சிக்கும், தேர்தல் கமிஷனுக்கும் இடையேயானது அதில் வேறொரு கட்சி தலையிடுவது முறையாகாது எனப் பாரதீய ஜனதாக்கட்சி கூறியுள்ளது இந்தப் பிரச்சினை குறித்து எதிர்வரும்பன்னிரெண்டாம் திகதிக்குப்பின்னர் முடிவெடுக்கப்படும் என்று தேர்தல் கமிஷன் கூறியுள்ளது.

## 'மக்கள் சுதந்திரப் புரட்சி' புதிய அரசியல் இயக்கம்

மக்கள் சுதந்திரப் புரட்சி இயக்கம் எனும் புதியதொரு அரசியல் இயக்கம் நேற்றுப் புதுடில்லியில் தொடக்கி வைக்கப்பட்டது. அறநெறியுடன் கூடிய புதிய அரசியல் நெறியமைவை உருவாக்குவதன் தேவையை மக்களிடையே வலியுறுத்தும் முகமாக இந்துஸ்தான் அந்தோலம் என்னும் அமைப்புடன் இணைந்து தொடக்கப்பட்டுள்ள கர்நாடக முன்னாள் ஆளுநர் பானுபிரதாப் சிங், ஓய்வுபெற்ற லெப், ஜெனரல் எஸ் என் சின்கா முன்னாள் வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் உட்பட பலர் இவ் இயக்கத்தில் அங்கம் பெற்றுள்ளனர்.

## சகலருக்குமான நிவாரணம் 10 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து மக்களுக்குமான வருமான எல்லைகள் கருதப்படாமல் வழங்கப்படும் இலவச உலர் உணவு விநியோகம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

மேற்படி உலர் உணவு விநியோகத்தின் போது இடம்பெயர்ந்த மக்களுக்கான விநியோகம் முதலில் மேற்கொள்ளப்படவிருக்கின்றது. அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் இவ்விநியோகம் சமகாலத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு கையிருப்பில் உள்ள உணவுப்பொருள்கள் போதுமானதாக இல்லாதபடியால் மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர் எனினும் இன்று வந்து சேரும் கப்பலில் உள்ள உணவுப் பொருள்களையும் பயன்படுத்தி மேற்படி விநியோகத்தை பூர்த்தியாக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நோயாளர் உதவிப் பணம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காரைநகர் பகுதியில் காச, புற்றுநோய்க்கான உதவிப் பணம் பெறத் தகுதியானவர்களுக்கு இன்றுசனிக்கிழமை சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஊர்காவற்றுறை உ. அ அதிபரால் பணம் வழங்கப்படும்.

## கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் ஆட்சிக்குழு கூட்டம் இன்று (6-4-91) சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு கொழும்புத்துறை சனசமூக நிலைய மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு. சோ. தியாகராசா தலைமையில் நடைபெறும். (24)

### யுத்தத்தின்

பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்படும் என்றும் தெரிவித்தார்

இதேவேளை தெற்கில் இரண்டுபுதிய கிராமங்களைத் திறந்துவைத்து பேசும்போது "நாட்டின் முன்னேற்றப் பாதையில் வடக்கு கிழக்கு புறக்கணிக்கப்படமாட்டாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் iii போட்டிப் பரீட்சைக்கு ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சி வகுப்புக்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்தும்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஏப்ரல் 07, 16, 17, 18, 19, 20ஆம் திகதிகளில் தினமும் காலை 9 மணிக்கு வகுப்புகள் ஆரம்பமாகும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் சகல ஆசிரியர்களும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கோரப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வெளியே உள்ள ஆசிரியர்களுக்கு 1991 ஏப்ரல் 16 தொடக்கம் 20ஆம் திகதிவரை தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

கல்வித் திணைக்கள அதிகாரிகள், பல்கலைக் கழகம், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள், பிரபல கல்லூரிகளின் அதிபர்கள் விரிவுரை யாற்றவுள்ளனர்.

இத் தகவலை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவிக்கிறார். (விளம்பர இல. B/2333)

### மோசடிக்காரர்

சாவகச்சேரியைச் சேர்ந்த இ தேவதாசன் என்பவரே பணமோசடியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

இவருக்கெதிராக கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியைச்சேர்ந்த உமாபதி தங்கராசா, செபமாலைமுத்து ஜூலியஸ் பிரான்சிஸ் அருணாசலம் கணேசலிங்கம் ஆகியோர் செய்துகொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே இவர் மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது

### வவுனியா

ணுவத்தினர் பம்மைமடுவை வந்தடைந்தனர். அச்சமயம் விடுதலைப்புலிகள் இராணுவத்திற்கெதிராக கடும்தாக்குதல் மேற்கொண்டனர். இத் தாக்குதல் காலை ஆறுமணியில் இருந்து பதினொருமணி வரை நீடித்தது

இச்சம்பவத்தில் இராணுவத் தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன சேத எண்ணிக்கை விபரம் தெரியவில்லை.

### வடக்கு வரும்

சருத்து வெளியிடுகையில் பொதுவாகமாதாந்தம் யாழ்ப்பாண பிரதம தபாலகத்திற்கு ஐந்துலட்சம் ரூபாவுக்கு முத்திரை தேவையான நிலையில் பலமுறை கொழும்பு அதிகாரிகளை வலியுறுத்திக் கேட்டதால் கடைசியாகக் கடந்தமாதம் பன்னிரெண்டாம் திகதி எமக்கு ஒருலட்சம் ரூபா முத்திரை அனுப்பிவைத்தனர். இந்த முத்திரை ஒருவாரத்திற்குக்கூட எமக்குப் போதாத நிலை இருந்தது என்று யாழ் பிரதம தபால் அதிபர் க. இராஜேந்திரம் கூறினார். (லோ)

### நானாட்டான்

ணுவத்தினரை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடுந்தாக்குதல் மேற்கொண்டனர்.

பின்நறுவிலிக்குளம், அச்சன்குளம் ஆகிய இடங்களில் நின்றசிறிலங்கா இராணுவத்தினர் காலை 11-30 மணியளவில் விமானப்படை விமானங்களின் உதவியுடன் நானாட்டான் வந்தடைந்தனர் இத் தாக்குதலில் இராணுவத்தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளது. சேத விபரம் தெரியவில்லை புலிகள் தரப்பில் பார்த்திபன், கோல்டின் ஆகிய இரு போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர். (மு)

### நிறுத்தல்

தாகத் தெரியவருகின்றது

இவ்வாறான வியாபாரிகளுக்கெதிராக வாரத்தில் புதன்கிழமைகளில் இவ்வேலைகள் மசபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. முத்திரை குத்தத் தவறும் வியாபாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இவ்வலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர். (க)

## ஆசிரிய இடமாற்றத்திற்கு புதிய திட்டம் அமுல்

(கொழும்பு)

ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கான புதிய திட்டம் ஒன்றைச் செயற்படுத்த கல்வி உயர்கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி காலி இடங்கள் உள்ள பாடசாலைகள் பற்றிய விபரம் பத்திரிகைகள் மூலம் தெரிவிக்கப்படும். இவ்வாறு காலியிடம் உள்ள பாடசாலைகளுக்கு விரும்பிய ஆசிரியர்கள் இடமாற்றக்கேட்கலாம் என்றும் அப் புதிய திட்டம் கூறுகின்றது.

## மாகாணங்கள் தோறும் பல்கலைக்கழகங்கள்

(கொழும்பு)

மாகாணங்கள் தோறும் பல்கலைக்கழகங்கள் நிறுவப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நடைபெற்ற மகாபொல விழாவில் கலந்து கொண்டு பேசிய பிரேமதாசா எதிர்காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்பி நன்கு கற்ற நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க வரும் நான்கு வருடங்களில் மாகாணங்கள் தோறும் பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று தெரிவித்தார்.

### யாழ். செயலக

கடந்த ஒரு வருடகாலமாக யாழ். மாவட்டத்தில் செய்த தமது சேவையை முடித்துக் கொண்டு உயர்பதவி பெற்று இவர் விரைவில் கொழும்பு செல்லவிருப்பது ஏற்கனவே தெரிந்ததேயாகும். (லோ)

### செஞ்சிலுவை

கள் முன்னணி யாழ். மாவட்டத் தலைமைச் செயலகத்தில் இந்த ஒப்படைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளான திரு. தோமஸ் அன்ரனற ஆகியோர் விடுதலைப் புலிகளிடம் இருந்து உத்தியோக பூர்வமாகச் சடலங்களைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இதைத் தொடர்ந்து பருத்தித்துறை துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறிலங்காகடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் தாமதம் ஏற்பட்டதினால் திட்டமிட்டபடி காலை 8.00 மணிக்கு இந்த கையளிப்பு நிகழ்ச்சி இடம்பெறாமல் சற்று தாமதமாக இடம்பெற்றது.

### வீரவேங்கை

ஏராளமான பொதுமக்களும், மாணவர்களும் மறைந்த வீரவேங்கைக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். மட்டுவிலில் இருந்து கன்னொலிகடியூடாக அழைக்கப்பட்டு கானகத்தில் இவரது புகழுடல்சாவகச்சேரிக்கு ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு பின் அங்கிருந்து கண்டிவீதி வழியாக கொடிகாமம் மாவீரர் மயானத்திற்கு பாண்ட் வாத்தியசகிதம் இராணுவமரியாதையுடன் எடுத்துச்செல்லப்பட்டது இறுதி ஊர்வலத்தின்போது வீதிஎங்கும் பூரணகும்ப வைத்தும், பூக்கள் சொரிந்தும் பொதுமக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர் பின்னர் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானத்தில் வீரவேங்கையின் புகழுடல் தகனம் செய்யப்பட்டது.

## மண்ணெய் விநியோகம்

யாழ் பல்கலைக்கழகத்தில் பயிலும் தென்தமிழீழ மாணவர்களுக்கும், விஞ்ஞானபீட மாணவர்களுக்கும் மறுமலர்ச்சிக்கழகத்தினால் இன்று மண்ணெண்ணை வழங்கப்படவுள்ளது. ஆனாலும் பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு இது வழங்கப்படாது.

## போராளிகளுக்கு பொது மன்னிப்பு

(பாக்தாத்)

ஈராக்கிய ஜனாதிபதிசதாம் ஹுசைனின் குர்திஷ் கிளர்ச்சிக்காரர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார். குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் பெருந்தொகையாக துருக்கிக்கும், ஈரானுக்கும் அடைக்கலம் தேடி ஓடுவதைத் தடுக்கவே இப் பொது மன்னிப்பு வழங்கப் படுவதாக சதாம் ஹுசைன் தெரிவித்தார்.

## கேரள சட்டசபை கலைப்பு

(டில்லி)

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் லோக்சபைத் தேர்தலுடன் சட்டப்பேரவைத் தேர்தலையும் நடத்த ஏற்றவகையில் கேரள மாநிலத்தின் சட்டப்பேரவை கலைக்கப்பட்டுள்ளது. சட்டப் பேரவைக் கலைப்பு நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

கேரள மாநிலத்தில் லோக்சபைத் தேர்தலுடன் சட்டப்பேரவைத் தேர்தலையும் நடத்துவதுபற்றித் தேர்தல் ஆணைக்குழு இனிமேல்தான் முடிவெடுக்கவுள்ளது.

### ஐந்து புலிகள்

னியா) ஆகிய இருபோராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் பார்த்தன் (ஆ நிக்சன், நானாட்டான்), மன்னார், கோல்டின் (பா. கிறிஸ்டி பிறேமராஜ், நறுவிலிக்குளம், வங்காலை, மன்னார், ஆகிய இருபோராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

இந்த ஐந்து போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது